[illegible]

[illegible]

T.D.R.ല 3312.
R.No :- 16 2 86.

O-,892MMP3,7
M86
117133

உ

முருகன்துணை.

பெங்களூர்

விநோத சபை.

# இந்திர சபா.

இஃது

திரிசிரபுரம்

சைவ சமய குரு பரம்பரை

கும்பகோணம்

சரவணமூர்த்தி சுவாமிகளின் மாணாக்கராகிய

திருமலைவாயல்

அப்பாவுபிள்ளை என்னும்

இயற்பெயருடைய

முத்துசாமிபிள்ளை யவர்களா

லியற்றியது.

இஃது

அத்திப்பேடு ம-ா-ா-ஸ்ரீ.

தாயுமான்முதலியாரவர்களாற்

பார்வையிடப்பட்டு,

சென்னை:

ரிப்பன் அச்சுயந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

*All rights Reserved.*

1896.

விலை அணா 6.

TO

HIS HIGHNESS SRI

**CHAMA RAJENDRA WUDAYAR BAHADUR**

**THE MAHARAJAH OF MYSORE.**

---

THIS

LITTLE VOLUME IS

**MOST RESPECTFULLY DEDICATED**

BY OBEDIENT AND HUMBLE SERVANT

THE AUTHOR.

உ

முருகன் துணை.

# இந்திரசபா.

---

இந்திரன் விருத்தம்.

முன்னைநிருபமாகி மூவரினுருவுமாகி
தன்மையசராசரத்து ளாடியுமெங்குமொன்றாய்
தன்னையேயமிர்தசான்றோர் தாவியேபோற்றுமோதர
என்னையேயாளுநாக்க யேற்றினேனீசாபோற்றி.

மந்திரி விருத்தம்.

சுரர்முதல்பலர்களாளுஞ் சொல்லியேயேற்றநீதி
உரமுடனியற்றியிந்த உம்பருக்கெல்லாஞ்சான்ற
கிரமமும்நெறியும்வேதக் கேள்வியும்பலிக்கச்செய்யும்
திரமுளபெயங்களிந்திர தேவனேயுன்றாள்போற்றி.

வசனம்.

எங்களாண்டவனாகிய இந்திரராஜேபோற்றி.

இந்திரன் வசனம்.

அப்பா மந்திரி அஷ்டதிக்குப் பாலகர்களும் நவக்கிரகாதிபதிகளும் தங்கள் தங்கள் காரியங்களிலேதேனுங் குறைவுகாட்டாமல் நடாத்தி வருகின்றார்களா?

மந்திரி வசனம்.

குறைவின்றி நடத்திவருகின்றார்கள் ஆண்டவா.

இந்திரன் வசனம்.

சந்தோஷம் மந்திரி யின்று நமது சபை யொருவாறுய்க் காணு ங்காரணம் எதுவாயிருக்கும் செப்புவாய் மந்திரி.

மந்திரி வசனம்.

அரசே நடனப்பெண்களின்னும் வந்து நடிக்கா திருப்பதே காரணம்.

இந்திரன் வசனம்.

ஆனால் நீ சொன்னதுஞ் சரிதான் அவர்களை சீக்கிரம் அழைத்து வரச்செய்வாய் எனக்கேனோ மனமொருவிதமாய் வெறுப்பு தட்டு கின்றது —

மந்திரி வசனம்.

அப்பா கட்டியனே நீசென்று அப்சரப்பெண்களைசீக்கிரஞ்சபைக்கு வரச்செய்குவாய்.

கட்டியக்காரன் வசனம்.

நல்லது சுவாமீ.

---

பொது கண்ணி.

வாராளிதோரம்பையென்னும் வஞ்சியோடியே
சேரப்நேராயிந்திரசபைச் சேராடியே

---

இந்திரன் கண்ணி இ-ம். காபி. தா. ஆதி.

ஏனோமனஞ்சோருதிதோ யின்றுதானுமே
யானின்ரம்பைநாட்டிய மாகவேண்டுமே



ரம்பை வசனம்.

போற்றி போற்றி ஆண்டவா அப்படியே நடிக்கின்றேன் உல்லா சங்கொள்வீர் ராஜே.

---

ரம்பை ஜாவளி

இ-ம. காபி. அடதாளம்.

ஆசையாகிவந்தேனிங்கு அரசேபாருமே
அன்பாயென்னைவந்துகட்டி அணையவாருமே

மோகமீறுதையையோவென் முகத்தைப்பாருமே
முத்தமிட்டு இரண்டுதனம் முட்டவாருமே

காமத்தாலேகளைவந்து கப்புதுபாருமே
காலுமிடைதுவளுதென்னைக் காக்கவாருமே

வெறுத்துயென்னைப்பார்ப்பதென்ன விதமோ நீருமே
வேண்டிக்கொண்டேன்கோபம்விடும் வேந்தேசேருமே

இந்திரன் வசனம்.

சந்தோஷமடிகண்ணே யென்னருகில் வந்திருப்பாய்பெண்ணே.

---

இந்திரன் கண்ணி.

எதோவொருவாறுதா யின்பங்கொண்டேனேன்
இன்னமேனகையாடா திருப்பதேனோதான்

---

பொது கண்ணி.

ஆடல்பாடலனுதினம் அடியாள்வேலையே
ஆனந்தமயமானமே ககைதன்வேலையே

இந்திரன் வசனம்.

அடி பாதே மோகை யின்னம் என்செவிக்கு யின்பங்கொடுக்கா திருப்பது உனக்கழகா.

---

பேனகை ஜாவளி

இ-ம். பியாக். தாளம் ரூபகம் மிஸ்ரம்.

ஓ மதனே மையலானேன் மருவவாருமே
பேதமிடலாமோநானே பேதைபாருமே ஓ

மோகமீறியோடிவந்தேன் மோடியாகுமோ
வேகமெனைக்கூடாவிடில் விரகம்போகுமோ ஓ

காமமீறிவந்தமாதைக் கசறலாகுமா
சோமவேளைகாலம்போனால் சுகத்தையிருமா ஓ

நானும்வந்தேதவிக்குமென்னை தடுக்கப்போகுமா
வீணாய்ப்பிடிவாதமிட்டு வெறுக்கலாகுமா ஓ

இந்திரன்வசனம்.

ஆ ஆ அடிமோகனாங்கி இங்குவா இங்குவா என்னருகிற் சேர்த்தாப்போல் கிர்பாய்குயிலே.

---

பொது கன்னி.

இதோவாராள் திலோர்த்தமை யென்னுமாதுதானே
சதாபூவின்வாசனைகள் சாற்றிருப்பவள்மானே

இந்திரன் கன்னி.

மோகநாணிமீட்டும் முகிலுடையோளாம்
மொழிகுயில்திலோத்தமை முறையினிமேலா

திலோர்த்தமை வசனம். அப்படியே நாதா.



திலோர்த்தமை ஜாவளி

இ-ம். காபி தாளம். ரூபகம்.

சாமியுன்னைநாடிவந்தேன் சரசனேவாரும்
சரணமிதோகாருமென்னை சருவிடப்பாரும்

காமமிதோமீறுதிட்டா கருணைசெய்குவாய்
கடினமொழிவிடும்விடும் காதல்சகுவாய்

மேனிவாடிச்சோம்பூதுளம் மேவிடப்பாரும்
மெல்லிவாடப்போமோயெந்தன் மித்ரனேகாரும்

இனிப்பொறுக்கலாகேனையோ யேழைநானுமே
எதுஜாடையோடிவந்து யேந்தத்தானுமே

இந்திரன் வசனம்.

அடி நாஜனி ஓடிவா என்னருகேயில் உனக்கும்சுகம் எனக்கும்சுகம்.

---

இந்திரன் கன்னி.

இன்னஞ்செவிக்கின்பம்வர யில்லையேநோதான்
அன்னநடைஊர்வசியை யழைப்பாயினித்தான்.

மந்திரி வசனம்.

இதோ அழைப்பிக்கிறேன் வேந்தே. அப்பா கட்டியனே சீக்கிரம் சென்று ஊர்வசியையழைத்துவருவாய்.

கட்டியன் வசனம்

நல்லது சுவாமி.

---

## சந்தனராஜன் கொலு.

சந்தனராஜன் போற்றி விருத்தம்.

தன்னிலேக்கட்டலே தயாகுணத்தாளே
வின்னமதறியா வேறுருவெடுக்கா
அன்னவர்க்கமுதே அருமறைப்பொருளே
என்னகர்செழிக்க எண்ணுவாய்போற்றி.

மந்திரி விருத்தம்.

கன்மனம்ருதும்வாதும்களவுடன்கொலையும்பொய்யும்
தன்னகம்ஆண்மைமற்நுந்தகாததுற்செய்கையோரை
மன்னவாவொடிக்கில்லமார்கமேபற்றச்செய்யும்
நன்லிலேவாய்ந்தசந்தனராஜனேபோற்றிபோற்றி.

வசனம்.

போற்றி போற்றி எங்களாண்டவனுகிய சந்தனமகாராஜே போற்றி.

சந்தனராஜன் வசனம்.

மந்திரி நமது நாட்டில் குடிகளெல்லோருஞ் சுகமா?

மந்திரி வசனம்.

அதிக களிப்போடிருக்கின்ருர்கள் வேந்தே.

சந்தனராஜன் வசனம்.

ஆனுல் சந்தோஷம் சந்தோஷம்.

கட்டியக்காரன் வசனம்.

சுவாமிப்ராக்குகுடிகள்இரங்கியமுகத்தோடுவந்திருக்கிறுர்கள்வேந்தே

சந்தனராஜன் வசனம்.

மந்திரி என்னகாரணமா யிருக்கும் குடிகள் முகமிரக்கமாய் வந்திருப்பது யோசித்துரைப்பாய்.



மந்திரிவசனம்.

அரசே அவர்களுக்கு முன் பிரயோஜனத்தை தருகின்ற பயிருக்கு என்னமோ கெடுதிநேரிட்டதாகக் காண்கிறது.

சந்தனராஜன் வசனம்.

அப்படியா அவர்களை இங்குஅழைத்து வருவாயடாகட்டியனே.

கட்டியன் வசனம்.

புத்தி புத்தி ஆண்டவா.

குடிகள் வசனம்.

போற்றிபோற்றி மகாராஜனே நாங்களிட்ட பயிரையெல்லாம் காட்டுமிருகங்கள்வந்து யழிக்கின்றது யென்னசெய்வோம் சுவாமி.

சந்தனராஜன் வசனம்.

மந்திரிவேட்டைக்குப் போகவேண்டும் வேடர்களை வரவழைப்பாய் குடிகளே நீங்கள் செல்லுங்கள் இதோநான் வந்தேன், மந்திரி இவர்களுக்குத்தக்க வெகுமதிகள் கொடுத்தனுப்புவாய்.

மந்திரி வசனம்.

அப்படியேசெய்கிறேன் ஆண்டவா.

சந்தனராஜன் வசனம்.

மந்திரி உன் புத்திக்கு மெய்ச்சினேன், நான் உடுத்திவருகின்றேன் நீயுஞ் சித்தப்படுவாய். மந்திரி பார்த்தையா பயிர்களெல்லாம் அதமாகிவிட்டது, இனிக்காலம் போக்கப்படாது நான்முன்செல்கின்றேன், நீங்களென் பின்பற்றி வருவீர்கள்.

---

சந்தனராஜன் கண்ணி

இ-ம். சங்கரா. தாளம். சாப்பு.

போகுதுபார் ஒருமான் அதிவேகமதாய்போகுதுபார்
புதையக்கால் பதிய அவ்வதிமிதிக்கும்பதைகாடி (போ)

ஏகுரேன்பார் சாம்பலைமேல்விளைவாக
ஏங்கிட்டின்வாங்கிச் சாந்தாங்கி உயிர்நீங்கி. (சாகுதுபார்)

சந்தனராஜன் வசனம்.

அப்பா மந்திரி பாதத்தைய்யா நான் மிருகங்களையெல்லாம் வதைத்தோட்டினேன். அவைகளை மறுபடியும் இங்கு நாடவொட்டாமல் வாட்டுவீர்கள், எனக்கோ மெத்தவுந் தாகமாயிருக்கின்றது இவ்வனத்துட் சென்று நீரருந்தி வருகிறேன். நீங்களிங்கேதானேயிருங்கள்.

மந்திரி வசனம்.

சுகமாய்ப் போய்வாருங் கோவே.

சந்தனராஜன் வசனம்.

ஆ ஆ இந்தவனத்தில் எவ்வளவு புஷ்பதான் விருட்சங்க ளிருக்கின்றன. நாட்டில் வசிப்பதைவிடக் காட்டில் வசித்தால் அதிக சுகத்தையடையக்கூடுமல்லவா. இங்கே யிருக்குங்குணத்தை யுணர்ந்தல்லோ யோகிகள் முனிவர்கள் நாடுநகரங்களை யணுகாமல் காடுறைந்திருக்கிறார்கள். ஆ ஆ அந்த விருட்சத்தின்மீது கிளிகள் கும்புகும்பாய் தாவுதலைப்பார் அவைகள் பேடுகளுடன் ஆனந்தமாய் வினவுந்தொனிகள் செவிகளுக்கு இன்பத்தைக்கொடுத்ததோடு நமது தாகத்தையுங் கொஞ்சம்போது தணித்தன. அடடா அந்த மயிலின் கூட்டத்தைப்பார் சிறகை விரித்தாடும் உன்னதத்தை பார்த்தையா, இதனிடம் யிவ்வளவு மேம்பாடானசெய்கை யிருப்பதினாலன்றோ சிவசுப்பிரமண்யக்கடவுள் தன்க்கு வாகனமாக்கிக்கொண்டிருக்கின்றார், இல்லாவிடில் என் வேறொரு மிருகத்தை நிர்மாணித்திரார், இப்பேர்க்கொத்தவுன்னதபட்சியின் பேரில் பவனிசெய்பவர், எவ்வளவு சரச சல்லாப ரசிகராா யிருக்கவேண்டும், என்னவிலாவினோதியாயிருக்கவேண்டும். இன்னமுன்னேசென்று நமது தாகவிடாயைத் தீர்த்துக்கொண்டு அதன்பின் இவ்வனத்திலுள்ள மற்ற விநோதங்களையும் பார்ப்போம். ஆ கடவுளே ஈதென்ன நீரில்லாவனமா, அப்படிக்கிருக்கின் இங்கிருக்கு மிருகங்களும் பக்ஷிகளும் எப்படி ஜீவித்துவாழ்கின்றது. என்னவிபரீதம் நான் இவ்வளவுதூரம் வந்தும் ஒரு நீரோடையைக்காணாதவனாயினேன். தாகமேலிட்டமேலிட் நாவுலருகின்றது. உடல் சோருகின்றதே என்செய்



வோம் என்செய்வோம். என்னுடன் வேட்டைக்கு வந்தவர்கள் தான் இன்னம் வரவில்லையென எதிர் பார்ப்பரோ மந்திரியோ மெத்தவும் வியாகூலமடைந்திருப்பனே என்செய்வேன்.

---

சந்தனராசன் கண்ணி

இராகம் நாதநாம தாளம் ஆதி.

ஆயீதென்ன ஆச்சரியமே.

நடக்க நடக்கவுளம் நாவது உலருதே
நாடிய நீரை நான்அறியேனே. (ஆயீ)

கலக்கமும்வலுக்கிதோ கரத்தையுங்குறைக்குதே
கடவுளேஜலமதை காட்டும்யிப்போதே. (ஆயீ)

இருசெவியடைக்குதே ஏக்கமுந்தாக்குதே
எண்ணமுமாறுதே யீசுரனே. (ஆயீ)

வசனம்.

நல்லதாயிந்த மேட்டின்மீதேறி நின்று கண்பார்வையெட்டுந்தூரம்பார்ப்போம். ஆ அதோ ஒருதிவ்யபூஞ்சோலை தோன்றுகின்றது கதலி, பலா, மா, விருக்ஷங்களுஞ் சேர்ந்து காணுகின்றது. அங்கு அவசியம் ஜலவோணி யிருக்கும். சீக்கிரம் போவோம். ஆ! இதென்ன யிந்தவனம் தேவவனமா, இந்தத் தடாகத்தின் ஜலம்தேவகங்கையோ, இதில் புஷ்பித்திருக்குஞ் செந்தாமரை அந்தக் கமலாதனுதித்ததேயாம். நாமெங்கும் இதுவரையில் கண்டறியோம். ஆ! மல்லிகை முல்லை யிருவாட்சி சண்பகம் கொன்றை மருவு, இவைகளின் அதி மேன்மையான மணஞ் சகிக்கக் கூடுவதில்லை. நல்லது நாம் முன்னே ஜலத்தை அருந்தி தாகத்தை யடக்குவோம். (அருந்தவும்) ஆ! இச்சலத்தின் இனிப் பெவ்வாறெண வருணிப்பது. இதில் கற்கண்டைக் கலந்திருக்குமா யோசிப்போம். இராது, அனுல் எதுவாயிருக்கும். இங்கு தேங்கு அதிகமாயிருப்பதினால் இவ்வனத்திற்குடையவன் அவ்விளனீர்களினை ஒடையாக்கியிருப்பதுபோற் காட்டுகின்றது. அப்படிக்கிருக்கின் இன்னீருக்குப் போக் கிடங்கா

றுகத்தினால் பூருவித தூர்வாசனைக் கிடமாயிருக்குமல்லவா. இதுவுமல்லபின்னேதுவாயிருக்கும் நமது புத்திக்கெட்டவில்லையே இந்தவனத்திற்குடையவனைத் தேடிக்கண்டு கேட்டறிந்துக் கொள்வோம். இன்றையப் பொழுதை யிங்கு நமது பரிவாரத்துடனே போக்கி நாளை நமது தேசம் போவோம்.

அவதூதன் வசனம்.

அரடா அங்கு ஏனுத்தரவின்றி சிங்காரவனத்திற்குட்பிரவேசித்தவன் எங்களரசிகண்டா லாக்கினைவரும் நில்லடாநில்லுகள்ளனே.

சந்தனராஜன் வசனம்.

அ இதென்ன யிவனோர் பூதம்போற் கர்ட்டுதே யிவன் கையிலிருந்து யெப்படித் தப்புவோம் விதியே நிராயுதபாணியாய்வந்து ஒண்டியாய் பூதத்தின்கையிற் சிக்கவா விட்டனை.

---

சந்தனராஜன் ஜாவளி

இ-ம். கமாஸ் தாளம். ஆதி.

ஏதென்னகோரமே யிதென்னகோரமே

| | | |
|---|---|---|
| தினைசெய்திடத் | திடத்துளனுமிவன் | |
| ஏதுதாஞ்செய்வது | யிவ்வனத்தன்னிலே | (ஏதெ) |
| நீசனைப்போலென்னை | நிசழ்த்தானுவினில் | |
| போச்சுதென்கவரமும் | பூமியையாண்டதே | (ஏதெ) |
| காத்திரமேனியும் | கடூரமாத்தொனியும் | |
| பார்த்திரமறியாமல் | பாவியும்பேசவே | (ஏதெ) |

சந்தனராசன் வசனம்.

இங்கு யோசிப்பதிலென்ன பலன் அவனெதிர்க்காமுன் நாமேசென்றவனைவணங்கித் தப்பிப்போவதே காரியம். வந்தனம் ஐயா நீயார் உன் பெயரென்ன உன்னுடைய இவ்வனமாருடையது தயவாயுரைசெய்வாயா,



அவதூதன் வசனம்.

அடா நரனே நாகிவ்வனம்காப்பவன் நானிருப்பது விண்ணூர் என்பெயர் அவதூதன் இவ்வன மோகினிவனம் இதற்கெஜமானி எங்களரசியாகிய சுயம்புவல்லி

சந்தனராஜன் வசனம்.

அப்படியா அவள்பேரோ சுயம்புவல்லியென்றால் அவள்ரூப மின்னமெப்படிக்கிருக்குமோ தெரியோம். நாமிவ்வளவுதூரம் வந்தும் அவ்வழகியைப்பாராமல் போவதடாது நல்லது அவளெங்கிருப்பதோ விசாரிப்போம் ஐயா காவலனே உன்னரசி யெங்கிருப்பது அவளுக்கு மனமாயிற்றூ நான் தெரிசிக்கக்கூடுமோ சனித்துரைப்பாயா.

அவதூதன் வசனம்.

அடாபயித்தியனே என்னரசிவசிப்பது மேல்லோகம் அவளோ தேவகணம் என்னரசியை நீ பார்த்தால் மறுபடியும் உன்னுடைவது துல்லபம்.

சந்தனராசன் வசனம்.

அதேதென்னையா

அவதூதன் வசனம்.

எங்களரசியின் காந்தியைக்கண்ட தேவர் முனிவர் சித்தர் முதலானவரும் சொக்கி சோகிப்பதென்றால் நீ யெவ்வளவு பனுதி சீ சீ ஓடிப்போடா சோலையில் நிற்காதே நிற்கர்தே ஆக்கினைவரும்.

சந்தனராஜன் வசனம்

அப்படியா இதற்கென்னசெய்வது நல்லது வருவதெல்லாம் வந்தே தீரும் முன்னிட்டகாலைப் பின்னிடப்போகாது.

பொது.

வாராளிதோ மோகினியும் வனமலர்போல
நேராய்நடந்து மன்னன்முன் ஜெயபார மாயஜால

கோடிசந்திரன் பிரகாசம்போல குளிர்ந்தமேனியாள்
ஆட்டிகைக ளிட்டிப்பணி பூட்டிமானியாள்.

ஆ! இவனாரடா அவதூதா இதுதானு நீ காவல்செய்யுந்திறமை தெரிந்தது.

அவதூதன் வசனம்.

ஐயையோ என்செய்வேன் என்செய்வேன் ஆக்கினையிடுவானே அடிட சண்டாளா என்க்கெமனாய் யெங்கிருந்து வந்தாயடா பாவி அப்பனே ஓடிப்போடா வென்றேனே அரசி கண்டுகொண்டாளோ.

சந்தனராஜன் வசனம்.

ஆ! இவளார் தெய்வகன்னிகையா நாககன்னிகையா வனதேவதையா ராஜகன்னியா அந்த ஊர்வசி யென்பவளோ மதன பெண்டெனும் ரதியா ஆ! என்ன ரூபம், என்னவடிவு, என்ன அழகு, யிவளிருஸ்தனவடிவைக்காண பதினாயிரங் கண்கள்வேண்டும். இவளை எப்படியாகிலும் அணையவேண்டும். அப்படிக்காகாவிட்டால் இவ்விடேயிவளிருபாதத்தருகில் நமது பிராணனைப் போக்கவேண்டியதே நாங்கொண்ட ஆசைக்கு அந்தியம்வேறில்லை. அடா இவன் யார் மதனு எனப்பா என்பேரில் கணைதொடுக்கின்றாய் நாஜுன் பகையாளியா பொறு, பொறு.

---

சந்தனராஜன் ஜாவளி

இசை. பியாக் தாளம் ஆதி

இந்தமோகனரசிக்கப் போருமோதானே
இவளைவிட்டுமேப்பால் போவேனோநானே.

கந்தவேளன்விடும் கணையால்நோகுதேயுள்ளம்
காமினி கேமினி தாமினி வாடி ஓ (இந்த)



சொகுசாய்நடைநடித்து கூட்டுறாய்காமம்
சுந்தரி நந்தரி வந்திடு யிங்கு ஓ (இந்த)

பாவமதடைந்திடும் பாரென்னைவெறுத்தால்
பாதகி தோதகி யாதரி யென்னை ஓ (இந்த)

சந்தனராஜன் வசனம்.

ஆ! இவளென்ன நம்மை வெறுப்பாய்க் கோபக்குறியோடு பார்க்கின்றாள். நாமே வலிய அவள்முன் சென்று வணங்கி வசப்படுத்தி கூடிசுகிக்கவேண்டும். இதற்குமுன் அந்த இந்திரபோகமும் ஒருபெரிதல்ல நமதிஷ்ட தெய்வந்தான் துணை. அந்த அப்சர ஸ்ரீயாகிய ஊர்வசி யதிரூபவதி யென்றும் நமது வம்சஆதிபுருடனாகிய பூரூரவராஜன் அவளாற்கேந்தியாயினன் யென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த ஊர்வசியு மிப்படிக்கிருந்திராள். அல்லது அவளே யிவளாயிருக்கவேண்டும். நா மெதிர்கொள்வோம், வந்தனம், வெகுவந்தனம், பிரீதிவந்தனம் மாதே.

---

சந்தனராஜன் கன்னி

செஞ்சுருட்டி தாளம் ரூபகம்.

ஏழைநானே தயைசெய்ய யிரங்குவாய் நீயே
இந்தொதரங்கூப்பி நின்றேனேவந்திடுவாயே

ஆரிழைத்தநலமோயிங்கு அடையலானனே
ஆடிமைஜயோயெனக்குவந் சருள்செய்வாய்மானே

பொற்கிண்ணம்போல்தோணுதிதோ பூவேயுந்தனம்
போற்றிசெய்தேன்திண்டமனம் பொறுப்பைவந்தனம்

மாரனிதோவாளிதூவி மயக்கிறன்கோதே
மன்னித்தெந்தன்பிழையிங்கு மருவுவாய்மாதே.

---

மோகினி-கன்னி

இ-ம். குறிஞ்சி தாளம் ரூபகம் இராகம்

ஆடாநாமெனி னீ யச்சமின்றியே
அடுக்கா மொழியாடவிங்கு யமைக்கு கின்றியே

தேவரும்மூவரும் தெரிசிக்க அருசி
திகைப்பசே கிவந்த திரன்ஸமயேயின்றி

அடேபோவோயென்முன்னே அங்கங்களுல்வாடி
அபிராய்வெறியனும் அதனுவாபோடி

சினமேயாய்கூறி செபிக்கிறீயேனே
சிறந்தசவம்போல செய்குவெனுனே

மோகினி வசனம்.

துன்பம் பிணி மூப்பு சாக்காட்டிற் குடையட்டுமே வாவா முடிவீர் சிசி

சேர்வை வசனம்.

அம்மா ஊர்வசி என் இன்னேரம் இந்திரன் சீக்கிரம் வரச்சொன்னர் வருவாயாய்.

ஊர்வசி வசனம்.

இதோ நான் புறப்பட்டுக்கொண்டு வருகின்றேன். என்கின்று கொஞ்சநேரம் அசவுக்கியமென வேந்தனுக்கறிவிப்பாய் சேர்வையே காவலாமிசம்பொறுக்க கோரினதாய்த்தெரிவிப்பாயப்பா.

சேர்வை வசனம். அப்படியே.

ஊர்வசி வசனம்.

அப்பா நல்ல பூதனே நான் இந்திரன் சபைக்குப் போகவேண்டும் விமானத்தைக்கொண்டு வருவாய்.

பூ-வ இதோ கொண்டுவந்தேன் அம்மணி.



ஊர்வசி கன்னி இ-ம். காபி ஏகதாளம்.

கோனுசென்று வந்தாயென நினைத்தேயிந்திரன்
கோரமென்ன செய்விப்பானோ யோசிக்கந்திரன்.

ஊர்வசி வசனம்.

ஆ! இதென்ன இன்றிவ்வேளையிலந்த மோகினி வனத்தின் மேடைமீது யாரோ ஒரு சுந்தரபுருடன் சயனித்திருக்கிறார் நாம் விமானம்விட்டிறங்கி அவரைப்பார்த்துப்போவோம் ஆ ஆ இவரார் இங்கு தனியே இவ்வுல்லாச மேடையின்மீது சயனித்திருக்கிறார் இவர் முகக்காந்தி நித்திரையிலேயே இவ்வொளிவீசுகின்றது. மதனோ இந்திரனோ மதனுகில்மேனி வனுக்குக்காட்டுமே இந்திரனுகில்யோனிக்கண்கள் விளங்குமே அல்ல சுப்பிரமணியனோ முருகனுகில் ஆறுமுகமிருக்கவேண்டுமே அல்லமாயனோ மாலாகில்பச்சைமேனியா யிருக்கவேண்டுமே அல்ல இவர் யாரோ நல்லது இவர் கையிலிருக்கு முத்திரை மோதிரத்தை பார்ப்போம் சந்தனமகாராசன் இவர்மேனியெல்லாம் சந்தனவாடை வீசுகின்றது நாமிவரோடுகூடி சுகத்தை அனுபவிக்காமல் போகப் போகாது. நித்திரையிலிருக்கிறாரே நித்திரையிலிருப்பவரை யெழுப்புவது தோஷமல்லவா காமிகட்கு தோஷ நிவாரணமென மதனா நால்பேசுகின்றதே எழுப்புவோம் எழுந்திருக்கவில்லையே துரையே இவ்வளவு அசதியான நித்திரை கொள்ளப்போயாவனமாச்சே மிருகத் துன்பம் சேரிடுமே. ஓ ஓ சரி ஊர்வசி வருவாள் என்று நினைத்துக் கொண்டீரோ இதோ வந்தேன் எழுந்திரும் நீரிங்கிருப்பது நானெப்படியறிவேன் என் கிள்ளைக்கு அனுப்பவில்லை நாதனில்லையோ சரிதனியாய்வந்தவர் மோகனுங்கா காமங்களைபுரணுதே கன்னியுடல் வரனுதே கடினசித்தங் காட்டுவதடாது. தையல்வருந்தக் கோபம் விடாது. அடாசாமி இனி சகிக்கேன் விதியே என்னை இச்செதியில் விட்டாயா ஆ இவனோர் இவனுக்கென்ன ஆத்திரம் சீ சீ காமா பொருஉன் மதத்தையொடுக்க என்றுமைசிங்க மெழுந்திருக்கின்றது. பார் சுவாமி இன்ன நித்திரையா அடியாள் படுந்துயரை நீக்கக்கூடாதோ என் வர்மமா அல்லது அடமா நானோயே நான்முன்னமே ஓடிவரவில்லையெனக் கோபமா ஒருபதமாகிலும் பாட்டுமோ செவிகொடுத்துக் கேட்பாயா பாடுவோம் இவர்தலையணிடங் குந்திபாடுவோம் அப்படியும் விழிக்காவிடில் அப்பால் வேறுயோசனை செய்வோம்.

ஊர்வசி ஜாவளி.

இ-தாளம் செஞ்சுருட்டி ஆதி

என்னுடன் நீ பேசாதது நியாயமோ
இத்தனைகோப மேற்குமொடாசாமி (என்)

நானுய்வந்திதோ தவிக்குறேன்காமியா
தயவிலாதிருப்பது தர்மமல்லடாசாமி (என்)

சுந்தரரூபனே சொகுசுளமாரனே
சோருதே ஆவியும் சொக்கினேனடாசாமி (என்)

இன்னமுந்தூக்கமோ இதுவுந்தன்ஜாலமோ
இத்தனைமோடியா இருப்பதென்னடாசாமி (என்)

பத்தரைமாற்றுள்ள பசும்பொன்றுன்மேனி
பாடியும் வேடியும் பாவியானேனடாசாமி (என்)

காமியாய்வந்திதோ காணடிபோற்றினேன்
கண்ணைத்மூடியே காட்டலென்னடா சாமி (என்)

ஊர்வசி வசனம்

ஆ யென்னுயகா பேசாயா யிதுவுமொருவிலையா் நல்லது மன தே இங்கேன் கலங்குவது நம திருப்பிடஞ்சென்று பூதத்தையேவி யெடுத்துவரச்செய்து நமதெண்ணத்தை முடித்துங் கொள்வோம் இதுதான்சரியான யோசனை அதற்குள்ளிவர் எழுந்தால் போய்வி வோரே இதற்கெப்படி அப்படிப்போகாதிருக்க ஒரு யேற்பாடு செ ய்துவைக்க வேண்டும் என்னசெய்யலாம் வேறென்றுஞ் செய்யப் போகாது இவர்கணையாழியைமாற்றி நமது கணையாழியைப்பூட்டிப் போவோம் எழுந்தால் கணையாழியைப்பார்ப்பார் பார்த்துதிகைத் தியோசிப்பார் அதற்குள் பூதத்தை யேவுவோம் இதுவேசரி

ஊர்வசிவசனம் அப்பா நல்லபூதனே

பூதன்வசனம் அபசாரம் ஆக்கினையிடுவாயம்மணி

ஊர்வசிவசனம் ஆ ஆ வுஸ் அப்பா

ஊர்வசி வசனம் எனக்கொரு உபகாரஞ்செய்வாயா



பூதன் வசனம்.

இட்சணமே சொல்லுவாய் தாயே

ஊர்வசி கண்ணி.

இ-ம். ஜல்சோஜ் - ரூபகம்.

ஆரண்யத்தே ஓரரசன் நித்திரைசெய்யவே
அடியாள்கண்டு காமமீறி யழுதேனையயவே (ஆர)

கத்திக்கத்தி யழுதுமவர் சற்றவில்லையே
கணையாழியைமாற்றிவந்தேன் கண்டுகொள்ளுமே (ஆர)

மோகினியாள்சோலையண்டை மேடைகாணுவாய்
மெள்ளச்சென்று அசையாமல தாங்கிப்பூணுவாய் (ஆர)

உண்டிமையாவெனிது உண்மையென்னுவாய்
உயிர்நிலைக்குமவரைக்கண்டால் உதவியென்னுவாய் (ஆர)

பூதன் வசனம்.

இதோ அரைவினாடிக்குள் கொண்டோடிவருகிறேன் விசனம் வேண்டா மம்மா.—

பூதன் வசனம்.

இதுதான் மோகினிவனம் மேடையெங்கே இதுதான் இதோ ஊர்வசிமாப்பிள்ளை தூக்கத்திலிருக்கிறான் ஆ ஆ இவனழகே யழகு இவன்காந்தி எந்ததேவர்கட்குமில்லை ஆனதனால்தான் ஊர்வசியிவன்மோகமானாள் அடாசுரனேயிவனிக்குவந்ததையோ பாவி ஊர்வசிகையில் சிக்கவாவந்தனை அவள் மகாகாமியாச்சுதே இரவும்பகலும் உன்னைஆட்டி உடல்வலுமையை ஓட்டிவிடுவாளே நானென்னசெய்வது மெத்தென யெடுத்துவரச் சொன்னாளே அப்படியே தாங்கிச் செல்வோம் இல்லாவிடில் தெண்டிப்பாள்இவன் மெத்த நித்திரையிலிருக்கிறான். ஓ—

பூதன் கண்ணி.

இ-ம். குல்மோஜ்-ரூபகம்.

ஆயிசொன்னவாறுசென்று அரசன்தன்னையே
அழைசயர்மலெடுத்துவந்தே வினைவாயன்னையே (ஆயி)

ஊர்வசி வசனம்.

ஆ எங்கென்னாயகன் பார்ப்பேன்

பூதன்வசனம். இதோ பார் தாயே

---

ஊர்வசி ஜாவளி.

அபுரூபம் ரூபகம்.

இவராமே எந்தன் ஆசை இவரென்காரியமாம்
இவரெந்தன் மதனரூபம் இவர்க்கடிமை நான் (இவ)

ஆரண்யத்தில் உன்னைக்கண்டு ஆவலாகறேன்
அழுதுநின்றும் கண்கள்மூடி அபிஷேகித்தேன் (இவ)

இந்தநித்திரை எழுப்பொட்டா எழுந்திருக்காயேன்
இங்குஎன்னைக் கூடிச்சேர இதுசமயந்தான் (இவ)

மாதழுதுவாடக்கண்டு மர்மமேனோதான்
மதனரூபாமயலாகுது மருவவாரும்தான் (இவ)

ஊர்வசிவசனம்.

ஆ என்சாமி இன்னந்தூக்கமா சந்தோஷம் இவ்வளவு அசதியான நித்திரை எதனாலிருக்கும்போசிப்போம் சரி என்ஆசைக்கி மோகினிவாடை தாக்கியிருக்கவேண்டும் அப்படிக் கில்லாவிடில் என்கானத்தைக்கேட்டபோதே யெழுந்திருந்திருப்பார் நல்லது ஐயா பூதனே இவருடைய மோகினிசொக்கிய தூக்கம் நீங்க இந்தமயக்க மறும் பனிநீரில் இந்த திவ்ய தேவதா சந்தனதியை கலக்கி மேல் நின்று சிறிய பனித்துளிகள்போலத் தூவித் தெளிப்பாயா.

பூதன்வசனம். அப்படியே தாயே



ஊர்வசிவசனம்.

ஐயா பூதனே பத்திரம் ஜாக்கிரதை பெருந்துளியாய் விடப் போகாது என் நாயகனுடைய தேகம் நோவெடுக்கும்

---

சந்தனராஜன் கண்ணி.

இ-ம்.ஜ குல்மோ- ரூபகம்.

எங்கிருந்தோமிங்குவந்த தெப்படிநாமே
எதிரினின்றமாதைக்காணேன் என்னமாயமே

சோலையெங்கே மேடையெங்கே சுரமுங்காணனே
சுந்தரமாயிம்மாடிபடஞ் சூழக்கண்டேனே

என்னமாயம் எவரின்சூதோ எதுவுந்தோணேனே
எங்குதுள்ளம் அமச்சனுட னெவருங்காணேனே

---

ஊர்வசி கண்ணி.

இ-ம். கமாஸ்-ரூபகம்.

கண்டேன்காந்தியே கதி நீயேதானடா கந்தா
கடிகிலில்வாயென் ஒரிடபோடி கட்டியணைப்பேனிந்தா

ஆரண்யத்தேயுன்னைக்கண்டு ஆசைகொண்டேனடா சதி
அருகினில்வா மாரில்கொங்கை யழுந்துவேநீயே பதி

காமதீயிப்பல்வாருய் கத்தி அழுதேனடா அங்கு
கண்திறக்காததனால்வா வழைத்தேனவிவாயிங்கு

எழுந்திடில்நீபோகாதங்கே இருக்கக்கண்யாழ்பூட்டி [ட்டி
என்றுமெதல்லாமெண்ணிவந்தேன் எனைத்தொடுவாய்கைநீ

கரைபெருகிகாமவெள்ளங் கால்கடுவாய்ப்பாயுதே
கலந்தணைவா இந்திரபோகங் காட்டுவேனடாயிப்போதே

சந்தனராஜன் கண்ணி.

இ-ம். க்யாஸ் - ரூபகம்.

அருமையுன்பேரதென்ன அறியச்சொல்லுவாய்கோதே
ஆச்சரியம் நீ இறகு அடைந்திருப்பதும்மாதே

ஊர்வசிகண்ணி.

இந்திரனிடசபைபடிக்கும் என்பேரூர்வசிடா சாமி
இவ்விறகுமேற்பறக்க இயன்றததிகான்காமி

சந்தனராஜன்கண்ணி.

புரூரவனோடு நீ கலந்தையென புகலவுங்காதைகண்டேன்
போற்றிசெய்தேனுண்மையதோ புகலுவாயிங்குன்மலினோடே

ஊர்வசிகண்ணி.

சாமியதுவுண்மையடா சக்கிரவர்த்திதானும்
சங்கடமிகவடைந்தார் சகியாமற்பிரியனுமும்

சந்தனராஜன்கண்ணி.

என்னையுமீ அவ்விதமா எய்கிலென்செய்வனடி
இருக்குமோவுயிர்போகாம விதர்க்குரைப்பாய்நீயடி.

ஊர்வசிகண்ணி.

ஆவியுள்ள மட்டுமுனை அகன்றிருக்கேனடா பாவி
அவருக்கொருசாபமுண்டு அறைவேன்கூடுவாய்காவி

சந்தனராஜன் வசனம்.

அப்படியானால் சரிதானடி என் கிளியே

ஊர்வசி வசனம்.

ஆ என் ஆசைக்குகந்த ஆண்கிளியே உன்னை நான் மெத்தவும் திருஷ்டிக்குப்பார்த்தேன் திருஷ்டிப்பட்டிருக்கும் இந்த மஞ்சத்திரு திருஷ்டிகழிப்பேன்.



சந்தனராஜன்வசனம். அப்படியே.

ஊர்வசிவசனம். அடி சகியே ஆலங்கொண்டு வருவாய்

சகி வசனம். இதோகொண்டுவந்தேனம்மணி

ஊர்வசி வசனம்.

என்முகமாய்த்திரும்படாசாமி.

துரையே இந்த சிற்றுண்டியை அருந்தி கலவைச்சாந்தணிந்து என்னுடன் கூடுவாயடா என் ரஸிரசமே.

---

ஊர்வசி.

ஜாவளி செஞ்சுருட்டி ரூபகம்.

சமயமிதுவே சரசமாடவாராய்
வாராய் அதிதீரா
கட்டிச்சேராய் சுகந்தாராய். (சமய)

ஆசையில்லா நாயகனே அறையடா நீ சாமி
சாமி நானேகாமி
மனந்தேமி ஓடிவாமி. (சமய)

காமமீறி கரைபுரண்டு கனக்குதேவுடல் நாதா
நாதா நிகழ் பாதர் வினை
நீதா இன்னம் வாதா. (சமய)

சங்கையின்றி கொங்கைதொட்டு சாமி எந்தனைக்கூடாய்
கூடாய் மனம நாடாய் இட்ட
வாடா முத்தந்தாடா. (சமய)

சந்தனராஜன் வசனம். நல்லதடி பெண்மயிலே

ஊர்வசி வசனம்.

அருகினில் வா என் ஆண்குயிலே

இந்திரன் வசனம். இன்னமேன் ஊர்வசியைக் காணோம்.

மந்திரிவசனம் சேர்வையே.

சேர்வைக்காரன்வசனம் சுவாமி

மந்திரிவசனம் ஊர்வசியைஅழைத்துவந்தாயா

சேர்வைக்காரன் வசனம்.

கொஞ்சம் நகையென்றும் உடுத்திக்கொண்டு வருவதாகச் சொன்னார் சுவாமி

மந்திரிவசனம்.

இப்போது அரசர் மறுபடி கவனித்ததாய் அறிவித்ததைத் தேடிவருவாய்

சேர்வைக்காரன் வசனம்.

நல்லது சுவாமி அம்மா ஊர்வசி இந்திரனழைக்கிறார்வருவாயம்மணி.

ஊர்வசி வசனம்.

இதோ வந்தேனடா சேர்வையே

என்னுசைக்குகந்த சாமி அடியாள் இந்திரன் சபைக்கிப்போய் சீக்கிரத்திலேர்டி வருகின்றேன் உத்திரவா துரையே

சந்தனராஜன் வசனம்.

மாதே நான்அங்கிருந்தவனை இங்கெடுத்துவந்து அறியாத விடத்திலென்னை ஒண்டியாய்விட்டு நீ இந்திரனிடம் போவதுசரியா அங்குபோனவள்இங்குமறுபடியும்வருவதுண்டாஇதென்னநிமையடி.

ஊர்வசி வசனம்.

ஆஆஎன்னையகாஎன்னுடல்அங்கும் உயிரிங்குமாயிருந்துகொஞ்சம்போது சபைகளிக்க நடித்து இங்கு ஓட்டமு நடையுமாய் வருவேன் வர்க்களிப்பாயடாமதனே இதோ ஆரைமுத்தமிட்டேனடாஎன்சாமி



சந்தனராஜன் வசனம்.

தலையைத்தொட்டாணையிடுனுர் தையலார்மொழியை நம்பலாகாதே கோதே பெண்ணே இந்திரபுரத்தில் இந்திரனுடைய சபையையும் அங்கிருக்கும் விநோதங்களையும் அதிமேன்மையாய்ப் புராணுதிகள் பேசுவதனுல் நானும் வருகிறேனென்னையும் அழைத்துச் செல்லுவாயடி காமக்கிளியே என் கட்டியமுதே.

ஊர்வசி வசனம்.

ராசா அதுவோ தேவசபை நராள்வரப் போவறதன்று வரினும் சபைக்காவலன் அறிந்தால் கொடிய ஆக்கினைசெத்திக்கும் நானும்தெண்டனைக் குள்ளாவேன்வேண்டாம் இங்கிருப்பாயடாகட்டிக்கரும்பே கருணையுள்ள சாமி.

சந்தனராஜன் வசனம்.

நாயகி அங்கு வரப்போகாதென்றென்னை நீ பயமுறுத்துவதைப்பார்த்தால் மறுபடியும் என்னிடம்வராயென்றுகாட்டுகின்றது நானைக்குப்போ இன்றென்னைச்சூழ்ந்த காமவிகாரத்தை நீக்குவாயடிப்பிரியவதனு.

ஊர்வசி வசனம்.

ஐயையோ நானென்னசெய்வேன் என்னோடொத்தமூவரும் அங்குவந்திருக்க நான்போகாவிடில் இந்திரன் சாபமிடுவான் என்செய்வேன் வார்க்களிப்பாய்நாதா உன்பாதமிதோ பணிந்தேன்பத்தாவே.

சந்தனராசஜன் வசனம்.

மாதே ஒப்பேன் ஒப்பேன் அங்கிருக்கு மற்ற மூவரையும் நான் அவசியம் பார்க்கவேண்டும் என்னையழைத்துச் செல்வாயடி அமிர்தக்கிளியே.

ஊர்வசி வசனம்.

ஐயோ துரையே அம்மூவரினழகு என்னுடைய இடதுகால் அங்குஷ்ட்டத்திற் கிணையாகும் வேண்டுமாயின் அவர்களை இங்கே

வாவழைத்துக் காட்டுகின்றேன் விடைதாரும் என் விவேகமுள்ள துரையே துரைசிங்கமே என் துரைசாமியே

---

ஊர்வசி.

ஜாவளி தாஜோலி சாப்பு.

கேள்கேளடாசாமி என்வார்த்தையை
கேளடாசாமி

ஆர்செய்ததவமோ அகப்பட்டாய் என்கை
அடியாளின்வார்த்தை தட்டாதே
அடமினிசெய்வது ஆகாது ஆகாது
அபாயம் அபாயம் வந்திடுமினி அதி
அட அட சாமி: (கேள்)

பிடிவாதம்செய்வது பெரிதல்ல துரா
பேறுவேன் உன்பாதம் நானே

அடிக்கடிக்கென்னை வருந்திடலாகா
நீயே நீயே துன்பம்
துன்பத்தை அடைகுவாய் அதி
அட அட சாமி: (கேள்

சந்தனராஜன் வசனம்.

பெண்ணே இதெல்லாம் வீண்வார்த்தை உனக்கு முன்னிருந்த ஆசையும் அன்பும் இப்போதில்லை தெரிந்துகொண்டேன் சரிதான் நீ போ இதோ என்னுயிரை இந்தவாளால் போக்கிக்கொள்ளுகிறேன்.

ஊர்வசி வசனம்.

ஆ ஆ என்சாமி இதென்ன காரியம் என்வாயில் மடுத்தெருவு மண்ணைப்போடவா எண்ணங்கொண்டீர் வருவது வழிதங்காது அப்படியே அழைத்துச்செல்கின்றேன் தயவுசெய்து மந்தத்திரும் தேவவிமானத்தை வரவழைக்கிறேன் என் கண்ணுளா



சந்தனராஜன் வசனம்.

அப்படிச்செய்யடி என் கண்ணே

ஊர்வசி வசனம்.

ஆ விதியே நான் என்னசெய்வேன் என் நாயகனை எப்படி இந்திரன்சபைக்கு அழைத்துச்செல்லுவேன் விமானத்தில் ஏற்றிச்சென்றாலோ கணங்கள் எடுக்கார்களே இதற்கு எப்படி அவரை அழைத்தேகுவதாய் வாக்களித்துவிட்டோம்விசனப்படப்போகாதுயோசிப்போம் அப்படியல்ல அவரையொரு பூமாலையைப்போல் நமது மந்திரபலத்தால் செய்து நமது இருஸ்தனத்தின்பேரில் புரளும்படி தரித்துவிமானமேறி இந்திரபுரமடைந்து அவரை எப்போதும்போல் ஆங்கொருமரத்தடியிலிருத்தி நாம்கொஞ்சநேரம் நாட்டியம்செய்து உடனே அவரை முன்போலவே பூமாலையாக்கி இங்கு அணிந்து வருவோம். இதுவே சரி அப்பா பூதனே நான் இந்திரன் சபைக்குப்போக வேண்டும் விமானம் வரச்செய்குவாய்.

பூதன் வசனம்.

அப்படியே இதோ விமானம் வந்தது அம்மணி

ஊர்வசி வசனம்.

துரையே நீர் என்னைப்பாராமல் கொஞ்சநேரம் இரு கண்களையும் இறுக மூடிக்கொள்ளடா என்காமரசமே,

சந்தனராஜன் வசனம்.

இதோ மூடிக்கொண்டேனடி என்கண்மணியே,

பொது-கண்ணி.

காமியாய்ஊர்வசி கணவனைக்கூட்டியே
கருதிவாராளோடி இந்திரன் கணத்தை நாட்டியே

பச்சைவடம் முத்துமணி பவழம்பூட்டியே
பதுங்கஇடம் ஆளனுக்கு பணிந்துகாட்டியே

ஆ என் ஆசை நாயகா இதோபார் இந்திரபுரம்வந்தோம் நீர் இந்த சுகந்தாதி மரத்திலிடம் ஒருவரும் காணாதபடிக்கு இருப்பீர் நான் சற்றுநேரம் நடித்து வருகின்றேன்

சந்தனராஜன் வசனம்.

மாதே உன்தயவினால் என் முதாசைகளும் காணுதற்கு அரிதாகிய இந்திரன் சபையைக்கண்டேன் மெத்தவும் அனந்தித்தேனிடன் னுட்டியத்தையும் இந்திரனையும் அங்கிருக்கப்பட்டவர்களையும் பார்க்கும்படி கிருபை செய்வாய் உனக்கிதோ வந்தனம் பெண்ணே.

ஊர்வசி வசனம்.

ஆ பிராணனாதா எனக்கு நீர் வந்தனம் செய்வது அழகா நான் உமக்குப் பணிவிடையன் வருவதுவந்தே இரும் அதுவல் இங்கு இருந்தபடியே இந்த மரப்பொந்தின் வழியாக என் நடன முதலானதும் பார்ப்பீர் நாயகா நான் சபைக்குப் போகட்டுமா.

சந்தனராஜன் வசனம். போவாயடி மயிலே.

ஊர்வசி வசனம். போற்றி போற்றி இந்திர ராஜே.

இந்திரன் வசனம்.

அடி பெண்ணே ஊர்வசி என்னே இவ்வேரம் விகாரவலையில் அகப்பட்டு அலறச்செய்ய எத்தனை நாளாய் கவனமிட்டிருந்தனே.

ஊர்வசி வசனம்.

அரசே நான் நேற்றையதினம் மெத்தவும் பாடி அலுத்தமையால் இன்றுவர கொஞ்சம் பொழுதாயின இன்னம் எனக்கு நித்திரை சோக்கம் தீரவில்லை தமது ஆக்கினைக்கட்டாமல் வரலாயினேன் மன்னிப்பீர் அரசே.

இந்திரன் வசனம்.

மானே என்னை களிக்கச்செய்ய இன்னமுந்தடையா

ஊர்வசி வசனம். இதோ என் ஆண்டவா.



ஊர்வசு ஜாவளி.

இராகம் செஞ்சுருட்டி ஏகதாளம்.

ஆகினேன்நான்மோகத்தால் — என் அரசேவாடவும்
அடமோயினியென்னைச்சேரா — தழகோ இன்னமும் ஆ

காமாதிகளுளம்வேதில் — களிக்குமோதேவே
கட்டிஎனை முத்தமிடும் — கனிதான்நீங்கவே ஆ

மோகமாய்சந்தனத்தை — முகத்தேன்கோரியே
போகசம்வரில் ஏதுசெய்வேன் — முலைதான்காரியே ஆ

இந்திரன் வசனம்.

மாதே இன்னொருபதம் பாடுவாய்.

ஊர்வசி வசனம். அப்படியே.

ஊர்வசி ஜாவளி.

இ-ம். [illegible] தாளம் ஏகதாளம்.

ராஜேஸ்திரீ ராஜ ராஜனே [illegible] — என் ரதிகாசந்தனம்
ரமிக்க இது காலம்காணும் [illegible] — ராஜே வந்தனம்.

தானுகிவந்தும் நான்பணிந்தும் — தயவைக்காணேனே
கருமமன்று கோபம்விடும் — கருணையானேனே

நான் எங்கிவாடவிடுத்தையே — விரகத்தால்விம்மியே
நியாயமாயோ பாவம்சுற்றும் — நானுமதும்பியே

காமிகளை வருத்தம்முணம் — கடினம்தான் நாதா
கட்டியொருமுத்தமிடும் — காதலாய்பாதா

மோகத்தாலே வந்தேன்என்றே — மோடிகாட்டுறாய
மோசவரில் ஆவிநீங்க — முடியும்நீபாராய்

பெண்ணாய்ப்பிறந்ததோஷத்தாலே — பிதத்தல்நாதனே
பிடிவாதம் விடும் விடும் — பிரியாப்போதனே

அக்கினியோத்திரன் வசனம்.

ஆ ஆ அரசே நரவாடை வீசுகின்றதே வீசுகின்றதே.

கொஞ்சம்போதில்வந்தவுன்னை கூடுவேன்சாமி
கோபம்செய்யப்போகா திதோ கும்பிட்டேன்சாமி

அக்கினியோத்திரன் வசனம்.

அரசே அரசே ஆ அரசே இங்கு நரவாடை வீசுகின்றது.

இந்திரன் வசனம். என்னவிசேஷமடா அக்கினியோத்திரா

அக்கினியோத்திரன் வசனம். அரசே இங்கு நரவாடை வீசுகின்றது

இந்திரன் வசனம். அப்படியா இங்கு எப்படிநரன்வருவான். தேடிப்பிடித்து இழுத்துவருவாய்.

அக்கினியோத்திரன் வசனம். இதோ கொண்டுவருகிறேன் அரசே

---

ஊர்வசி-ஜாவளி.

இ-ம். குறிஞ்சி-அடதாளம்.

அக்கினியோத்தரா நீஇவ்வனம்பார்
அறியாதுஒன்றில்லை அகத்தினில்தேர்

இதமேமேவினேனீ என் மனம்கார
இதைநான்மறந்திட்டேன் என்றதாய்ப்பார்

கோளுரைசெய்வது குணமில்லைதான்
கோதையின் காயுகள் கும்பிட்டேனே நான்

விதியாலே அவரிங்கு விந்தவர்காணே
வேறேறவாராயல வேண்டினேனே நான்

ஆ அடடா நரனே நீ இங்கு எப்படி வந்தனை விரிதிடுகொத்து யால் கடடா.

---



சந்தனராஜன் ஜாவளி.

இ-ம். நா-குறிஞ்சி - அடதாளம்.

அறுதிநான்தேவே நீ அருள்செய்வாய் இன்று
அடிமைநான் ஆகுவேன் அறிகுவாய் நன்று ஆ.

தாயார்தந்தைமற்றும் தமயனும் நீதான்
தயவுசெய்யில் வந்தன் தாள்பணிவேன் நானே ஆ.

பாதாரவிந்தத்தைப் பற்றினேனுனே
பாவமென்னைக்கொன்றால் பழியாகும்தானே

அவனுதன் வசனம்.

நடையாலே நட இந்திரபோகம் அனுபவிக்கவா வந்தனை இதோ நரனைக்கொண்டுவந்தேன் அரசே.

---

சந்தனராஜ-கண்ணி

இ-ம். காபி-தாளம்-ஆதி.

போற்றி போற்றி போற்றி இந்திரபூசுரதேவே
ஐயனுன் செய்தபிழை பொருத்திடும் கோவே

கண்ணி-இ-ம்-காபி-தாளம்-ஆதி.

எங்கிருப்பதுந்தனுடு இங்கு என் வந்தாய்
இயம்பிடில் பொய் உயிர்நீங்கும் எண்ணுவாய் கந்தா

---

சந்தனராஜன்-கண்ணி

இ-ம். காபி-ஆதிதாளம்.

அன்றிஜவந்தாபனும் அறிகுவீர்நாதா
அடைந்தேனே இங்கு ஊர்வசியால்அடியேனும்பாதா

இந்திரன் வசனம்.

அப்படியானென்சபையை நான் பார்க்கப்போறா அவனோ மேதி அவன் அழைத்தாலும் நீ வருவது அக்கிரமா இல்லையா அடா அக்கி னியோத்திரா இவன் கொஞ்சமும் கொஞ்சம் அஞ்சாமல் நமது சபை க்குவந்து நானிருக்கும் உல்லாசத்தையும் விநோதங்களையும் பார்த் ததையால் இவனை பாதாளகெவியில் அடைத்து பாராங்கல்லை மூடி விடடா.

அன்-வசனம்.

மெத்த சந்தோஷம் அப்படியே செய்கின்றேன் அரசே அடே டை டை இந்திரபோகம் அநுபவிப்பாய் உன் புண்ணியமே புண்ணிய மடா நரனே

இந்திரன் வசனம்.

அடி மாதே ஊர்வசி நீ செய்தகாரியம் சரிதானா உனை இனை மூப்புக்குடைய ஜென்மியாகிய நரன்மேல் ஆசைகொண்டு கூடி அ நுபவித்ததுடன் அவனை சற்றேனும் அஞ்சாமல் என்சபைக்கு அழைத்துவந்தனை தேவர்கட்கும் காணுதற்கு அரிதாகிய என்ச பையை அவனுபார்ப்பவன் என்னடி.

இந்திரன்-வசனம். மந்திரி. மந்திரி-வசனம். சுவாமி.

இந்திரன்-வசனம்.

நானென்னசெய்வேன் ஊர்வசியை காணே தண்டனைவிதிக்கும் காலம் வந்ததே ஆ ஆ என்னசெய்வேன்

மந்திரி-வசனம்.

அரசே அநேக யாகாதிகள்செய்து ஏகபத்தினி விரதனாய் இருப்பவரும் காணரிதாகிய சபைக்கு நரனை அழைத்து வந்த குற்றம் மன்னிக்கத் தக்கதன்று ஊர்வசிக்கு தண்டனை விதிப்பதே செங்கோலுக்கு அழகு வேந்தே.

இந்திரன் வசனம்.

மந்திரி இவளை எப்படி கொடியதண்டனைக்கு ஆளாக்குவேன் என்மனம் மெத்தவும் கிலேசமடைகிறதே பாவ



மந்திரி வசனம்.

அரசே கொடியபிழை செய்தவாளை கடினமான தண்டனைக் குள் ளாக்குவதே நீதி வேந்தே.

இந்திரன் வசனம்.

அப்பா மந்திரி நான் அப்படிச் செய்ய விரும்பேன் அவளை நான் சபையோரறிய தண்டனை தண்டித்தாற் போலும் அவளுககு ஒரு கொடியதுன்பம் இல்லாததுபோலும் ஒரு ஆக்கினைசொல்வாய்.

மந்திரி வசனம்.

ஊர்வசியை தண்டிக்காவிடில் மற்ற அப்சரப்பெண்கள் துரு வார்கள் அவளுடைய சிறகை வாங்கச்செய்வதுடன் சபைமுன் அ வள் கநத்தையும் குறைவு செய்விப்பீர் வேந்தே.

இந்திரன்-வசனம்.

மந்திரி அவள்கனத்தை இவர்கள்முன் குறைக்க மனங்கொ ள்ளேன் நீ சொன்னபடியே சிறகைமாத்திரம் வாங்கச்செய்வேன் மறுபடியும் அவைகள் வளர்ந்தோங்கும் ஓ தூதரே இந்த ஊர்வசியை வனத்திற்கொண்டுபோய் இரண்டு பாட்டைகளையும் வாளினால் வீசி இந்த எல்லைதாண்டி விரட்டி வருவீர்களடா.

தூதர் வசனம். அப்படியே சுவாமி.

ஊர்வசி வசனம். அடியாள் போகட்டுமா.

---

இந்திரன்-தரு-இ-ம்-சாமா-தா-ரூபகம்.

என்னவிதி வந்ததடி இன்றுனக்குமானே

ஏதுசெய்வேன் உன்பிழையோ ஏற்கப்போமோ தேனே
ஏங்கவுளம் ஓங்கத்துயர் இன்றுமடியானேன் (என்)

நரனையிங்கு அழைத்துவர நியாயமோ பாவீ
நால்வருன்னை நகைக்க அடி நாள்வந்ததே தேனே (என்)

மீட்கவுன்னை எதுமார்க்கம் இன்றுகாணேன்பாவி
மேனிவாடுதே நுசெய்வேன் மிருதுமொழியுள்ளதேவி (என்)

ஆடல்பாடல் என்றுகாண்பேன் ஐயோநானும்கண்ணே
ஆசையொடுங்கிதோஷிபோல அலையவிட்டாய்பெண்ணே (எ)

இந்திரன் வசனம்

மாதே நான் என்னசெய்வேன் என்மனதில் என்றும் நீங்காத துன்பமூட்டையை கட்டிவைத்துவிட்டாய் நாயகி இதுவும் விதியின் கூறே அல்லது எவரின்சாபக்கோளோ போ போ.

தூதன் வசனம்.

அம்மா ஊர்வசியே குனிவாய் தாயே.

தூதன் வசனம்.

இனி எங்கையாகிலும்போவாய் அம்மணிசிங்காரத் தோட்டத்தில் போயிரு இந்திரன் அங்கு வரும்போது வணங்கி எப்போதும் போல சபைக்குவருவாய் அம்மணி. அரசே ஆக்ஞை யிட்டவாறு நடத்திவிட்டோம் வேந்தே.

இந்திரன் வசனம்.

அப்படியா ஆ ஊர்வசி விதியே விதியே மதியால் என்ன மாறும் பெண்ணே மேனகா இப்போது என்மனம் மெத்தவும் கிலேசத்திற்குள்ளாயிற்று நீ ஒரு திவ்ய பதம்பாடி நீக்குவாயடி மாதே.

மேனகை-வசனம். நல்லது அரசே

ஊர்வசி-வசனம்.

ஆ சந்தனம் என்றால் உனக்கு துன்பம்வந்ததா இனி என்று உன் முகத்தைக்காண்பேன் என்துரையே என்பெருமையும் குலைந்தது நீயும் மீளா கெவிக்குள்ளாயினை நாயகா நான் எவ்வளவோ வருந்திச்சொல்லியும் கேளாமற்போனையே ஐயையோ பரமேஸ்வரா



ஊர்வசி-ஜாவளி.

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

ஆகினேன் இக்கெதி சந்தனமே
அரிட்டசாபமோ அறியேன் என் நாயகனே (ஆகி)

எத்தனைவிதமா யும்க் கெடுத்து நான் ஓதியும்
எத்திடாராகினீர் இதற்கோ என் நாயகனே (ஆகி)

இந்திரன்கெவிதனில் இட்டானே பாவியும்
இனியுன்னைக்கூடுவ தெப்போதென் நாயகனே (ஆகி)

கிட்டியகனிவாய்க் கிடுமுனே யிழந்திடக்
கேடேது செய்தேனோ கெதியார் என்நாயகனே (ஆகி)

ஊர்வசி வசனம்.

ஆ தெய்வமே என்னை இக்கெதிக்கு ஆளாக்கிவிட்டாயா நான் ஆசைகொண்ட மணவாளன் எனக்குக்கிடைத்தும் அனுபவிக்காமல் பிரித்தாய் என்னை என்போலொத்தவர் நகைக்கவும் ஆளாக்கினாய் இனி என்னசெய்யப்போவாய் ஆ சந்தனமேனியா என்னால் நீ கெவிக்குள் ஆனையா இதுவும் விதியின்சோதனையா ஓ பரமேஸ்வரா இனி என்செய்வோம் எங்கு செல்வது தூதர் சொன்னவாறு சிங்காரவனத்திற்கு செல்வோமா அங்கு தேவதா பெண்களெல்லாம் வருவாரே நம்மை இக்கோலத்தில் கண்டு நகைப்பரே என்னயோசனை. உருமாறிப்போவோம் எப்படி இந்தப்பெண்வேடம் நீக்கி ஒரு சந்நியாசியைப் போல மாறுவேடம்பூண்டு செல்வோம் இதுவே சரி அங்கொருவேளை இந்திரன்வந்தால் வசப்படுத்திக் கொள்வோம

---

ஊர்வசி கண்ணி.

இ-ம்- தன்னியாசி ஏகதாளம்.

ஏதோ காதா பவமிழைத்தேனோ
ஈசன் அருளிதாமோ (ஏதோ).

மாதோ நானோ பாவி பாவி
மன்னன்கெவிக் குள்ளானான் (ஏதோ)

கும்பிகொதிக்குதே என்நாதா
கொழுநா சந்தனராஜே (ஏதோ)

வெம்பிவெருண்டு வெறுநுதேமனம்
விதியின்செயலிதாமோ (ஏதோ)

ஊர்வசி வசனம். ஆ பிராணேசா தனியே புலம்பலானேன யோ அதிக துக்கத்தை யடைந்தாய் ஐயையோ பரமேஸ்வரா

---

ஊர்வசி ஜாவளி.

தேசியம்-ஆதிதாளம்.

விதியே போதுமே வேந்தனை விட்டேன்(விதி)
உலகெலாம்தேடியும்கிட்டிடாதல்ல தேனைபோக்கடித்தையே(விதி)

தூங்கியமன்னவனை தூக்கிவந்திடச்செய்தும்
தோஷியாய்வாடலானேனே தூறுவந்ததே. (விதி)

மஞ்சத்திருந்திமனமகிழ்ச்சியாய் ஆடும்வேளை
பாபாவிதூதுவிட்டானே மாறல்வந்ததே. (விதி)

தடுத்தும்கான்மீறியே தயாபராவந்தாயே
தனியாய்ப்புலம்பவிட்டாயே தாழ்மைவந்ததே. (விதி)

என்றுன்முகம்காண்பேன் எதுசெய்குவேன்சுவாமி
என்னுயிர்வைக்கேனினியே ஏழ்மைவந்ததே. (விதி)

ஊர்வசி-வசனம். ஆ விதியே என்னைப்பறுதியுக்கினையா ஓசந்தனமேனியர் கெவியில் சொக்கிடலானையா இந்திரன் அதையவும் நான் குறையவும் நீ மறையவும் பலாசைபுரியவும் வந்து கேட்டது ஐயோ துரையே (சிங்காரத்தோட்டம்.)

காவலாளியின்-வசனம். ஆரப்பா சந்நியாசியே.

சந்நியாசி-வசனம். நான் பரதேசியப்பா.

காவலாளன்-வசனம். எங்குவந்தனை.



சந்நியாசி-வசனம். என்மனோவியாதியை ஒருவாறு நீக்க இவ்வனமடைந்தேன்.

காவலாளியின்-வசனம். அப்படியா இது சிங்காரவனம் ஒன்றையும் தீண்டப்போகாது தீண்டில் சிரச்சேதம் வாய்த்திடும் அறிவாய்.

சந்நியாசி-வசனம். நல்லதப்பா காவலனே.

---

சந்நியாசி-ஜாவளி.

இ-ம். கமாஸ்-தாளம் ரூபகம்.

இதம்கோ நீயும் எனை துடர்ந்ததிங்கே நாதா
இன்பமும்போனதே எண்ணமுந்தீர்ந்ததே
ஏகினன் ஏகினன் ஏகினன் ஏகினன் (இத)

ஆறாத்துயபோகச்செய்வேன் அல்லதெவ்வாறுகாணலாவேன்
தூறுக்கெனை ஆளாய்விட்டு தூரையும் அக்கேவிபட்டு
போயினன் போயினன் போயினன் போயினன் (இத)

எங்குபாவிஉன்னைக்காண்பேன் எவ்வாறுனைக்கூடுவேன்
மங்கிடவும்வந்ததிதோ மரிக்கமுறைசெப்பாதேதோ
மாறினன் மாறினன் மாறினன் மாறினன் (இத)

ஆசையதுமீறுதே அலுந்துமேனிசோருதே
தோஷியாகின்றேனே துயராகிக்கொண்டேனே
தோணிடான் தோணிடான் தோணிடான் தோணிடான் (இத)

காவல்காரன்-வசனம்.

ஆ. ஆ. இந்த சந்நியாசி பாடுந்தொனியைக்கேட்ட குயில்களும் கிளிகளும் மற்றப்பறவைகளும் பரவசமாய்க் குந்திய இடம்விட்டு போகாமல் இருக்கின்றது. இப்படி நல்ல தொனியுடன் பாடுபவரை நாம் என்றும் கண்டதில்லை. இன்னம் கொஞ்சம் இவருடைய பாட்டைக்கேட்டு மகாராசனுக்கு ஓடி அறிவித்தால் நமக்கேதாகிலும் வெகுமதி கிடைக்கும்.

சந்நியாசி-வசனம்.

ஆ என்சாமி மனங்கர்மிருணாளேமி ஒழிவாமி என்கிட்ட கைபறற துப்பொட்ட சுகம் நற்ற மனமே நீ கலக்கத்திற்குள்ளானேயா கண்ணனைப்பிரிந்தாயா கண்ணும் குறைந்தாயா சுகத்தையிழந்தாயா விதியே விதியே விதியே.

---

சந்நியாசி-ஜாவளி

இ-ம். தேசிகம்-ஏகதாளம்.

நொய்யுதேநெஞ்சமிதோ     நோன்பென்ன நோற்றேனடா
நீதுரையென் நாயகமே     நாயகன்கெட்டாயோடா (நொய்)

எவ்வாறுன்னைப்பிரிந்தே     இருப்பதுதுயரணிந்தே
இங்குதனியாய்ப்புலம்பி     எங்கவிட்டாய் என்னடா (நொய்)

ஆவியுளமட்டுமென்னை     அலையவிட்டாய் நினைந்தானே
ஐயயோநான் இவ்வனத்தில்     ஊருந்துனைகாணேனடா (நொய்)

தேங்குமாவுபலவிருக்ஷம்     தெரியுதேயிங்கொருபட்சம்
தேடியும் சந்தனமரம்     சிக்கிடாதென்னமோடா (நொய்)

அந்தமான பலபட்சி     ஆடிப்பாடுதிதோ பட்சி
அன்னசந்தனன்நடைபோல்     அசைய ஏதுங்காணேனடா (நொய்)

கூவிக்கூவிங்குநான்     குந்திநோக்கியும் உந்தன்
குரலொலிபோலவேதொனி     குயிலும்பேசக்காணேனடா (நொய்)

விதவிதமானபுஷ்பம்     விளைந்திருக்குதே இங்கண
வேந்தன்முகமலர்போல     விட்டதேதுங்காணேனடா (நொய்)

சந்தமாகபலகுன்று     சார்ந்ததிங்கேவெகுநன்று
சந்தனன்புயற்றை ஒற்ற     சாடையேதுங்காணேனடா (நொய்)

தோரணவேகதலிமரந்     தொகையாய்நிற்குதேசரம்
துரைசந்தனன்றுடைபோல     தோற்ற ஏதுங்காணனடா (நொய்)

காணுதேசெங்கழுநீரும்     கனிணுருக்குமிழம்பூவும்
காமிசந்தனன்நாசிபோல     காட்டவில்லையேஎன்னடா (நொய்)



சந்நியாசிவசனம். ஆ!-மனமே எனிப்படித் தயங்குகிறாய் எழுதாதவிதி அழுதால் வருமா நாம் முன்னொரு காலத்தில் புரூரவராஜனை விட்டுப்பிரிந்து அவன் நம்மைக்கோரி மெத்தவும் பிரலாபித்து அழச்செய்தோமல்லவா அவ்வினை இன்றைனில் வந்து மூண்டது துயரப்படாதே ஆ கண்களே உங்களை நான் எவ்விதமான தேறுதல்செப்பி ஆற்றப்போகிறேன் அடா சந்தனமேனியா.

---

சந்நியாசி ஜாவளி. (இ-ம்சுருட்டி-ஆதிதாளம்.)

என்கண்களும்தேடுதே காமி எப்போதுகாண்பேன் சாமி.

என்று என்துரை,     எனைக்கூடுவானோ
இருகொங்கைதொட்டு     இருந்தாடுவானோ
இவ்வாசையென்னைக்     கெடுத்ததே (என்)

சந்தனமேனியா,     சாமிநீவாடா
சாகிறேன் உன்னாலே     சங்கடமோடா
சரசியை     மறந்தாயோடா (என்)

தாயையும்வெண்டேன்     தந்தையைப்பார்க்கேன்
தரணியில்மற்றோரை     தழுவிடேனெக்கேன்
தலைவிதி     தயங்கவிட்டதே (என்)

ஆ துரையே உன்னைப்பிரிந்த அடியாளுக்கு இங்கு தோன்றும்சுகந்த மலர் வாடைவீசுவதில் என்னகுணம் இனி எனக்கேது சுகம்நாதா.

---

சந்நியாசி கண்ணிகள்.

இராகம் தேசியம் ஆதிதாளம்.

உந்தனைப்பிரிந்தேசுகம்,     உண்டோவேறே ஓ பதி
உயிரோநிலைப்பதிங்ஙனே     உண்மையாகாதேவிதி (உந்)

விந்தையாடிடாமலே     விட்டதே என்வினையே
வேகுதடாமேனியுமே     விருப்பமாதி ஓ பதி (உந்)

சொந்தமானதுரையென்றே சொருகசாய்க்கூடினேனே
சோகமீறுதிதோ வுடல்     சோருதோடி வாபதி (உந்)

எந்தனைப்போல் எவரும்     எங்குவரோபாரிலே
ஏதுபழிசெய்தேனடா     இங்குசந்தனம்விதி (உந்)

காவலன் வசனம். பராக்பராக் இந்திரபூபதியே,

இந்திரன் வசனம். சிங்காரத்தோட்டத்தில் ஏதேனும் புதுமையுண்டா சீக்கிரம் தெரிவிப்பாய்.

காவலன் வசனம். சுவாமி கானலோல வஜீகரா நமது சிங்காரவனத்தருகில் ஆரோ ஒரு சந்நியாசி திவ்யமாய்ப் பாடிக்கொண்டு அலைவதைக்கண்டு அறிவிக்கவந்தேன்வேந்தே

இந்திரன் வசனம். அப்படியா அவ்வளவு நேத்தியாய்ப்பாடுகிறனா.

காவலன்வசனம். சுவாமி இரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்த்தமை நாரதர் இவர்களைவிட அதிகமாய்ப் பாடுகிறான்தேவே.

இந்திரன் வசனம். அப்படியானால் சீக்கிரம் அழைத்து வருவாயடா காவலனே.

காவலன் வசனம். மகாபாக்கியம்தேவே.

---

சந்நியாசி ஜாவளி.

இராகம் காபி ஏகதாளம்.

தனியாய்ப்புலம்பலானேனே, விளையாடுநாதா, போனவிடமு மறியேனே (தனி)
நினைந்து நினைந்துமனம் நொட்டுயிர்போக்கி நின்றிடலானேன் நீ தவிக்க
நினைக்க நினைக்க இங்கு நின்றழலானேன் நீதான், போனவிட்மு மறியேனே (தனி)
ஏங்கி ஏங்கி மனம் எண்ணுதுமென்னவி இரங்கிடலானேன் என்றனையே நினைக்க (தனி)
கரைந்து கரைந்து உடல் காட்டிவில்லை காலமுமாச்சே காமினிக்கே நினைக்க (தனி)

காவலன் வசன். ஐயா சந்நியாசியே யார் எங்கிருப்பது உன் பெயரென்ன உரைப்பாய்.



சந்நியாசி வசனம். ஐயா நான் பெண்டிழந்தபேதை என்பெயர் சந்தனம்பூசி என் பெண்டைபூதம் எடுத்துப்போய்விட்டது நான்இப்படி தனியாய்ப் புலம்புகிறேன் அப்பா.

---

காவல்காரன்-கண்ணிகள்-(இ-ம்.குறிஞ்சி-அட்டதாளம்ரூபகம்.ரூபகம்)

சொல்லுவேன்சந்நியாசி சூட்சமேபார்
சுந்தரஇந்திரனே சொன்னதைத்தேர்
ஆரோஉன்பெருமையை அறைந்தனர்பார்
அழைத்துவாவென்றனன் அறிந்துநீசார்
ஆடலில்பாடலில் ஆனந்திப்பார்
அளிப்பான்உனக்குப்பொன் அனந்தமாய்த்தேர்.

காவலாளியின்-வசனம்.

சந்நியாசியே எங்களரசன் அழைக்கிறார் அவரோ கானலோலன் உன் பாட்டைக்கேட்டு மகிழ்ந்தால் உனக்கு வேண்டியதைக் கொடுப்பார் வருவாயா.

சந்நியாசி -வசனம்.

அப்பா நானோ சந்நியாசி எனக்கு வேண்டியவஸ்து ஒன்றுண்டு அதை அவர்கொடுப்பாரென எப்படி நம்பிவருவேனப்பா.

காவலாளியின்-வசனம்.

அவரோ இந்திரன் நீ எதைக்கேட்டபோதிலும் அந்த வஸ்து எவ்விதமானதாயிருந்தபோதிலும் அது எந்தலோகத்திலிருந்தாலும் வரவழைத்து உடனே கொடுக்குந்தியாகி ஆனால் நீ அவர் மனங்களிக்கும்படி மாத்திரம் பாடவேண்டியது சந்நியாசியே.

சந்நியாசிவசனம். அப்படியே ஆகட்டுமப்பா என்னைஅழைத்துச்செல்.

காவலாளியின்-வசனம்.

வாரும் இதோ பாரும் இந்திரன்சபை அதோ ரத்தினகசித சிம்மாசனத்தின்மீது இரம்பை மேனகை திலோர்த்தமை அருகில் நிற்க மாவைபோகமாய் வீற்றிருக்கும் மகானுபாவர்தான் இந்திரன் நீமுன்சென்று போற்றிசெய்புவாய் சந்நியாசியே;

சந்நியாசி வசனம்.

நல்லதையா அரகரா அரோகரா சம்போ சங்கரா மகாதேவ ஜெய்ப்பரமேஸ்வராபோற்றி இந்திரராஜே,

இந்திரன் வசனம். வாரும் சந்நியாசியே உமக்குப் பாடத்தெரியுமா.

சந்நியாசிவசனம்.

என்னமோ கொஞ்சம் சம்போ சங்கராவெனப்பாடத்தெரியும் கொஞ்சம்போது ஆடவும் தெரியும் வேந்தே.

இந்திரன் வசனம்.

ஆ. அப்படியா ஏதோ மோகமீறும் முறையானபதங்கள் இதரிந்தால் பாடும் பார்ப்போம்.

சந்நியாசி வசனம்.

தாங்களோ மகா உன்னத ரஞ்சிதமான பாட்டுகளைக்கேட்ட செவிகளையுடையவர் எனக்குத் தெரிந்தமட்டிலும் காமமூட்டும் சிலபதங்களைப் பாடுவேன் உத்தரவானால்.

இந்திரன் வசனம். சீக்கிரம் சீக்கிரம் ஆரம்பியும்.

சந்நியாசி வசனம். மகாபாக்கியம்.

---

சந்நியாசி-ஜாவளி

இ-ம்.காபி-ஆதிதாளம்.

மன்னனைப்பிரிந்த முதலாய் கண்ணுறங்காதேன்காரணமோ
அல்லும்பகலும் அரைதுடித்திடவும்
அடிக்கடி அவன்பெய ரகத்தில்நினைத்தே
சொல்லதுமாறி சுகமும்வேசாரி
சோருடநீரும் அறந்தனையோ

இந்திரன் வசனம்.

ஆ. பளாமெத்த சந்தோஷம் இந்த சந்நியாசிக்கு பட்டுபீதாம்பரம் கொடுப்பாய் மந்திரி.

மந்திரிவசனம். அப்படியே அரசே.



சந்நியாசி வசனம்.—காவியணியும் சடைனுக்கு கனத்தவஸ்திரத்தால் என்னபலன்வேண்டேன் அரசே.

சரணம்.

ஆருடன்நானும் அன்புடன்பேசில் அவனிடபேரை அறையுதோசாடி மாரதுவிம்மி மனமுங்கலங்கி மயக்கமாய்த்தோணுது மாற்றலேதோ

இந்திரன் வசனம்.—ஆ ஆ. மந்திரி இந்தசந்நியாசிக்கு விலையுயர்ந்த சரிகைவஸ்திரங்கொடுப்பாய்.

மந்திரி வசனம்.—அப்படியே ஆண்டவா.

சந்நியாசி வசனம்—ஆசைகொண்டவனுக்கு ஆடையேன் அருமை மையல் போகுமாவேண்டேன் அரசே.

சரணம்.

குலிங்கிடக்கினும் கூடஅவனுமே
கோதேவருவதாய் கொள்ளுதே மனம்
நிலவதுகனலாய் நெட்டுயிர்போக்கி
நிற்கிறேன்பாவி நீ கெதியே (மன்)

இந்திரன் வசனம்.—மந்திரி இந்தசந்நியாசிக்கு புதிய ரத்தினாபரணிகள்கொடுப்பாய். மந்திரிவசனம்.—அப்படியே. சந்நியாசி வசனம். சதியை யிழந்த சண்டாளனுக்கு புதியரத்தினமேன் சருவுமாகாயம் பெருகுமா வேண்டேன் அரசே.

சந்நியாசி-ஜாவளி (ரீதிகௌளா-திரிசரதாளம்.)

காநே ஒண்டி என்னசெய்வேன் காநே ஒண்டி
ராஜனே நான் என்னசெய்வேன்
காநே பரதேசிஐபா (கா)

தாவியமஞ்சமீதே தனித்திடலச்சே
தவிக்கிறேனே இதோ ராஜே (கா)

தேவியைவிட்டு மேனி இளைத்திடலச்சே
தேடுறேனே. (கா)

என்றைக்கு காணப்போகிறேன் என்னவாகுதே
ஏதுசெய்வேன். (கா)

கூடிக்குலாவும்வேளை கூப்பிடவிட்டான்
தோடும்பாவி. (கா)

மாரில்கொங்கையைநாட்டி மருவிடும் காலே
வாவென்றுனே கண்டாளன். (நா)

சரசமுமீதிசைகை செய்திடும்வேளை
சண்டாளன். (நா)

இந்திரன் வசனம். சந்தோஷம் மந்திரி இந்த சந்நியாசிக்கு தேவ மஞ்சம் கொடுப்பாய். மந்திரி-வசனம். மகாபாக்கியம் அரசே.

சந்நியாசி வசனம்.

அஞ்சலி நீர்கொடுக்கும் மஞ்சம் என்னுடன் கொஞ்சுமா குலவுதல் மிஞ்சுமா வேண்டேன் அரசே.

சந்நியாசி-ஜாவளி (ஆனந்த-பயிரவி ஏகதாளம்.)

கிளிவாயிலெகொந்து வாடலானேன்
மன்மதநுப்பா வருந்திடலானேன். (கிளி)

உன்னாசையாலே உருக்குலைந்தேனோ
உளரிடலானேன் இதோ. (கிளி)

ஆசினைகாயேன அலைவதுபாவி
அலைந்திடலானேன் ஐயோ. (கிளி)

சரசன்கீயென சாமிநான்கூடி
சருவிடாமுனம்சாமி (கிளி)

ஆ ஆ மெத்த சந்தோஷம் சந்நியாசியே உன்னுடையபாட்டை க்கேட்டதால் இன்று நானும் என்சபையிலுள்ளோரும் எடுத்தஜென்மம் சாபல்லியமாச்சதென்பதற்கு தடையில்லை இன்னம் ஒருபதம் பாடுவாய் சந்நியாசியே.

சந்நியாசிவசனம். நல்லது அரசே.

சந்நியாசி ஜாவளி.

இ-ம். காகரப்பிரியா ஆதி-தாளம்.

மன்னவனே உந்தனை மயக்கத்தேடி
மன்மதவாதையாலே வாடுறேனே
வாடுறேனேஇதோ தடுறேனே
மன்மதவாதையால் வாடுறேனே. (மன்ன)



இருவருமகூடி இருந்திடும்வேளை
எமனுபத்தூதன் எதிரிடலானான்
கருமவினைப்பயனோ கலக்காமல்வாட
காமன்கணையால்இதோ கரையுறேனே
கரையுறேனே நான் குறையுறேனே
காமன்கணையால் இதோகரையுறேனே.

இந்திரன் வசனம்.

அப்பாமந்திரி இந்த சந்நியாசிக்கு வேண்டியபொன்கொடுப்பாய்.

மந்திரி வசனம் நல்லதாண்டவா.

சந்நியாசி வசனம். சந்நியாசிக்குப் பொன்னேன் வேண்டேன் அரசே.

சந்நியாசி ஜாவளி.

இ-ம். காகரப்பிரியா ஆதி-தாளம்.

முகமுகம்சேர்ந்து முத்தங்கொடுத்து
மோகமுந்திர முலைக்குநாமகூடி
சுகமதுபெருகி சொக்கிடாமுன்னம்
குறைதஇழைத்தனனே சுந்தரனே
சுந்தரனேயார் தந்திரமோ
குறைத இழைத்தனனே சுந்தரனே. (மன்ன)

இந்திரன் வசனம்—சந்நியாசி இந்த கண்டசரத்தை தயவுசெய்துக்கொள்வாயா. சந்நியாசி வசனம்.—அரசே பெண்டிழுக்கனுக்கு கண்டசரத்தால் என்ன பலன் வேண்டேன் தேவே.

சந்நியாசி ஜாவளி.

காகரப்பிரியா ஆதி-தாளம்.

குடங்கையில் தாங்கி கொங்கைநாட்டி
கோவைவிதழையூட்டி கூடிடாமுன்னம
மருதியில்வாவென சாற்றினன்பாவி
சாவியும்வாடுறேன் சந்தனமே
சந்தனமே இதோ வந்தனமே
சாவியும்வாடுறேன் சந்தனமே. (மன்ன)

இந்திரன் வசனம்.

மாதே இரம்பா இந்த சந்நியாசி உங்களைப்போல பெண்ணாயிருந்து இவ்விதம்பாடுவல் காமத்தை வெறுத்து லோகடத்த யோகிகளையிறும் கலக்கமென்னாதிருப்பாரா.

இரம்பை வசனம். இருக்கமாட்டார் நாயகா.

இந்திரன் வசனம்.

சந்நியாசியே நீமெத்தவும் சந்தோஷத்தைக் கொடுத்தாய் இனி உன்பாட்டைக் கேட்பேனுகில் என்மனம் பெற்றுப்புதுகடினமாக்கும் உனக்கு வேண்டியதைக்கேள் கொடுக்கிறேன் என்சொல்லைக்கேட்டாலும் தடைசெய்யேன் இது உண்மை.

சந்நியாசி வசனம்.

எனக்குவேண்டியதைக்கேட்டால் கொடுக்கப்பிரியமா அரசே.

---

சந்நியாசி ஜாவளி.

இ-ம். சர்கரப்பிரியா ஆதி-தாளம்.

மதமதுபொங்கி மயலதுஓங்கி
மாரனை ஒட்ட மருவிடுமுன்னே
விதவிதத்துன்பம் விளைந்ததேசாமி
வேண்டிலேன் ஆவி வித்தகனே
வித்தகனே என் சித்தஜனே
வேண்டிலேன் ஆவி வித்தகனே. (மன்ன)

இந்திரன் வசனம்.

ஆ ஆ ஆ நீ கேட்டதைக் கொடுப்பேன் சந்நியாசியே அப்படிக்கொடுக்காவிடில் ஒருநீச்சன் இந்தசபையோர்றிய எங்குருவானை கொடுக்கின்றேன்கேள் அஞ்சவேண்டாம் சந்நியாசியே. சந்.-வ. நீர் கெவியில் அடைத்தஎன்துரையை எனக்குக்கொடுத்தருளும்வேந்தே.

இந்திரன் வசனம்.

அப்பா மந்திரி ஆ என்சபையோர்களே ஊர்வசி என்னை ஏய்த்தாளே என்னசெய்வேன்.

இந்திரன் கவி.

என்சபையிலிருக்கும் இருடிகளேகேளீர்
தன்னிறமிழந்தும் தாழ்வது அடைந்தும்
அன்னநடை ஊர்வசிமாடியிள்ளைவேண்டுறாள்
நன்னதோர்நீதிசொல்லுவீர்தாமே.

இந்திரன் வசனம்.

சபையோரே ஊர்வசி என்னை ஏய்த்தனள் [illegible]ணும்வாக்களித்து விட்டேன் இதற்கு நியாயஞ்சொல்லுவீர்கள் அன்[illegible]



சபையோர் வசனம்.

அரசே ஊர்வசிக்கு அசுவனிதேவர்களால் நரனைக்கூடும்படி முன்னமேசாபமுண்டு இது முடிவாகுங்காலம்வந்துவிட்டது இவளால் சந்திரவமிசம்பெருகவேண்டும் இவள், சாபம் நீங்கியவுடன் நரனைப்பிரிந்து இவ்விடம் வருவள் அப்போது அவன்காமியாய் மோகினிவனம் வருவன் அங்கே கெங்கையைக்கண்டு மோகித்தணைந்து ஒருபுத்திரனைப் பெறுவன் அவனால் குலவிர்த்தியாகவேண்டிய காரணம். கெவியிலிட்டவனை சீக்கிரம் இவள்வசம் செய்து வாழ்த்தி அனுப்புவீர்வேந்தே. இந்திரன்வசனம்.—அப்படியாகாரணம் ஆனால் சரிதான்

இந்திரன் கண்ணி.

இராகம். குறிஞ்சி கண்டசாதி ஏக-தாளம்.

அக்கினியோத்திரா நீ இங்கோடிவா
சிக்கினேன் ஊர்வசி செய்கையினால்
மாயசந்நியாசியாய் மயக்கினாள் இங்கு
நாயம்வேறில்லை நடந்துநீ அங்கு
கெவியிட்டநரனையே கிட்டியேபாலா
அவிழ்த்தவன்சிறைநீக்கி அழைத்துவாசீலா.

அக்கினி வசனம்.

ஆ இப்படிவந்து முடிந்ததா ஒரு பெண்பால் தான்கொண்ட எண்ணத்தை எவ்விதத்திலும் முடித்துக்கொண்டாள். நாம் இனிச்செய்வதேதுண்டு நல்லது. அக்கினி வசனம்.—அடே நரனே. இங்குவா நட நட. சந்தனராஜன் வசனம்.—ஐயையோ இந்திரன் இன்னம் நம்மை என்ன செய்வானோ அறியோம் விதியால் வருவதெல்லாம் வந்தே தீரும். ஊர்வசி வசனம்.—ஆ என்துரையே.

ஊர்வசி ஜாவளி.

இரா-சாமா தாளம் சாப்பு,

மருவே நீவாராய் மையலைத் தீராய்
சாமிநீ சேர்ந்ததை சகித்தாயோ வாடா (மரு)
இந்த விதிக்கோ என்னுடனே வந்தாயா
என்செய்வேன் கெவிக்குள் இருக்கஆனாயா (மரு
உன்னைப்பிரிந்து நான் ஊரினேன் நாயா
ஊட்டுவேன் இதழ் ரசம் உகந்துசேராயா (மரு)
ராஜனை வசமாக்கி நான்கொண்டேன் காமி
[illegible]கனே கூடுவோம் நடந்துவா சாமி. (மரு)

சந்தனராஜன் வசனம்.

ஆ, என் ஆசை மணாட்டி முன் உனக்கிருந்த இரகுக்களெல்லாம் இப்போது காணேன். ஊர்வசி வசனம்.—ஓ என் ஆவியே ராஜனே னே சபைக்கு அழைத்துவந்த குற்றத்திற்காக இந்திரன் வெட்டிச்செய்தனன் நாயகா. சந்தனராஜன்வசனம்.—ஆ நாயகி என்னுயிர்க் கோடிய கண்டனைக்குள் ளானேயா. ஊர்வசி வசனம்.—ஐயையே அதற்காக நீ யோசிக்கவேண்டியதில்லை உன் திருவடி இருக்கையால் நான் இந்திரனை வசமாக்கி உன்னை மீட்டுக்கொண்டேன் இனி பயமில்லை நாளும் நீயும் கொண்ட எண்ணமும் ஆசையும் தீருமடி! மன்னவும் பேடு போலும் கிளியும் மானும்போல் மீரதியும் மதனும் போலும் புரூரவனும் ஊர்வசியைப் போலும்; சமர்த்தி, பதி, அதிதி, மனோரதிகளில் சமஷ்டத்தைமுடிப்போமடா என்சாமி என்றுரைய கெவிக்குள் மெத்தவும்வருத்தமடைந்தையோ, மேனி மெலிந்தையோ, இங்கு சற்று தங்குவாய் உன் இயாகத்தைவிட்டுச்சம் போது கமழ்வீ பிடிப்போமடா என்பிங்கமே என் பிராண சிநேகமே. சந்தனராஜன் வசனம்.—அடி மாதே என் மனோ ரஞ்சிதமே கெவியில் உன்னையே கவனித்துக்கொண்டிருந்தேனடி நாயகி சித்திரத்தில் காணலானேன் டி. இனி நாம் நமதிருப்பிடம்போவோம் வருவாயடி மதனரூபியே. ஊர்வசி வசனம்.—அடா சாமி அங்கப்போறதற்கு இனி அரசபோயக்கப்போகாதே. கிணற்றின்கிணை வெள்ளம்கொண்டு போமோசாமி நாமிருவரும்இந்திரனிடம்சென்று அவன் அனுமதிபெற்றுநாம் போவோம் வருவாயடா என்குந்தசமே. சந்தனராஜன் வசனம்.—சந்தோஷம் ஆனால் இந்திரன்முன் போவோம்வருவாயடி. அக்கினிவசனம்.—அக்கினியின்படிநானே அழைத்துவந்தேன் அரசே. சந்தனராஜன்வசனம். போற்றி போற்றி இந்திரராஜே எளியேன்செய்த பிழையைப்பொறுத்து ஆட்கொளவேண்டும்காதா. இந்திரன்வசனம்.—அப்படியே நனே பெண்ணே ஊர்வசி இங்குவருவாய்சபையோர்களே இன்று ஊர்வசியை இந்த நாளுக்குபாலித்தேன் நீங்களெல்லோரும்சுபம் சொல்லுவீர்களாக. சபையார் வசனம். சுபம்சுபம் சுபம். இந்திரன் வசனம். ஓ அப்சரப்பெண்களே நீங்கள் இவ்விருவர்களுக்கும் ஆனந்தவிசேஷ பதம்பாடுவீர்கள். அப்சரப்பெண்கள்வசனம்.—அப்படியேராஜே.



அப்சரப் பெண்கள் சன்னிகள்.

இ-ம் நவரோஸ் தாளம் ஜம்பை.

சந்தனமகாராஜ சவுந்தரிய சசா
சதாயெங்கள் ஊர்வசியை சருவிடுவாய்வாசா
இருவர் மதன் ரதிபோல இரவுபகல்கால
மருவிவிளையாடி சுகம் அனுபவிப்பாய்சால
கொண்டஎண்ணம்உந்தன்கைகூடியதேமாதே
அண்டர்கோ னளித்தவனே அனுபவிப்பாய் கோதே
பெண்களாசைவில் பெண்ணரசி பேதைகளில் நற்றுசி
கண்கள்குளிர்ந்தோம் இவனை கட்டியணை நேசி

இந்திரன் வசனம்.

பெண்ணே ஊர்வசி நீ உன் நாயகனை அழைத்துக் கொண்டு உனக்கிஷ்டமான இடம் சென்று சுகிப்பாய். ஊர்வசிவசனம்.—மகா பாக்கியம் வேந்தே. இந்திரன்வசனம்.—மாதே ஊர்வசி நீ இதின் சபை வருவதென்றுமோ ஒரு பதம்பாடிப் போவாயடி நாயகி.

ஊர்வசி வசனம்.—அப்படியே ஆண்டவா

ஊர்வசி சோட்.

இ-ம் சங்கராபரணம். ஏகதாளம்

போகேந்திரா போகேந்திரா புவனரசிகா
பூவையுனைமறப்பனோ ஆசிகா

கொங்கையுனைப்பார்க்குதிதோ மனமோகா
கூடி எனைச்சேர்ந்திடுவாய் களத்தியாகா

கட்டி முத்தமிட்ட சுகம் மறவாதே
காம வேளை கூடமதி துறவாதே

திரு முத்துசாமி பதம் மறவோமே
தேசமெங்கும் அவர் புகழ்அறைவோமே. (போகி)

இந்திரன்-வசனம்.—மெத்த சந்தோஷம் போய்வருவாய் பெண்ணே ஊர்வசி அப்பா மந்திரி. மந்திரி-வசனம்.—அரசே. இந்திரன் வசனம்.—இந்தரபூபதிக்கு வேண்டிய விலையுயர்ந்தரத்னபூஷணங்கள் கொடுத்தனுப்புவாய். மந்திரி-வசனம்.—இதோ கொடுத்தேன் அரசே. ஊர்வசி-வசனம்,—சந்தனமேனியா இனி நாம் நமதிருப்பிடம் இந்தவிமானத்திலேறி செல்வோம் வருவாய்மதனே.

சந்தனராஜன் வசனம்

மாதே நான் இருப்பது அஸ்தினபுரம் குடிகளிட்டபயிரை மிருகங்களழிப்பதை கேள்விப்பட்டு நானும் என் மந்திரியும்வேட்டையாடவந்தவிடத்தே நான் அரை நொடியில் மிருகங்களையெல்லாம்வதைத்து தாகமீறி வனத்துட்பிரவேசித்து மோகினிச்சோலை அடைந்து நீரை அருந்தவும் காவலன் அதட்டவும் மோகினி எதிர்த்தோன்றவும் நான் காமமீறி அவளடிபணிந்தேன். அப்பால்உன் மனையிலிருக்கக்கண்டேன் ஆதலால் என்மந்திரி அந்தவிடத்தே இருப்பான் தயைசெய்து அங்கு விமானத்தைநடத்துவாயா.

ஊர்வசி-வசனம். நாயகா மெத்த சந்தோஷம்.

மந்திரி வசனம்.

அரசே எங்களை இங்கிருத்தி தாங்களெங்கு சென்றீரோவென அடியேன் கொண்டிருந்த துக்கமெனும் அந்தகாரத்தை நீக்க இன்று சூரியனைப்போலுதித்த உமது அடிக்கிதோ போற்றி.

சந்தனன்-வசனம்.—மந்திரி நான் இம்மாது சிரோன்மணியை இந்திரபுரத்தில் மணம் புரிந்துவந்தேன் தோழா.

மந்திரி-வசனம்.—ஆனந்த மடைந்தேன் புளகாங்கிதனானேன். போற்றி எங்களை ஆளவந்ததாயே.

ஊர்வசி-வசனம்.—வாழி வாழி மைந்தா.

சந்தனன்-வசனம்.—மந்திரி நமது அரண்மனை அடைவோம் மங்கலபேரிகை அறைவிப்பாயாக.

மந்திரி-வசனம்.—அப்படியே.

சந்தனராஜன்-வசனம்.—மாதே என்கண்ணே இதோ நமதுநாடுவந்தோம் அண்ரமமனைகருப்போவாம் வருவாயடி.

ஊர்வசி-வசனம்.—சந்தோஷமடா துரையே ஆனால் ஒன்று உன்மனதில் கவனமிடுவாய் அதாவது சூரியனுதித்தபின் நீ உறப்போகாது உறங்கிலோ நான் நீங்கிவிடுவேன் அறிவாய் நாதா.

சம்பூர்ணம்.